# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

**2015 – 2016**

## கல்வியாண்டின் ஆண்டறிக்கை

அன்பார்ந்த பெரியோர்களே! சிறப்பு விருந்தினர்களே! ஆண்டுவிழாவின் சிறப்புரையை ஆற்ற வந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் அவர்களே! மாணவமாணவியர்களே! அனைவருக்கும் வணக்கம்.
கல்லூரி முதல்வராகிய நான் இக்கல்வியாண்டின் ஆண்டறிக்கையை மகிழ்வுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

13.09.2013 அன்று திருவாடானையில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் காணொளி வழியாக இக்கல்லூரி துவங்கப்பெற்றது.

இக்கல்லூரியில் பி.ஏ. (தமிழ்), பி.ஏ. (ஆங்கிலம);, பி.எஸ்சி. (கணிதம்), பி.எஸ்சி.(கணினி அறிவியல்), பி.காம் ஆகிய இளநிலைப் பட்டப்படிப்புகள் துவங்கப்பெற்றன. தற்போது இப்பட்டப்படிப்புகளில் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு என்ற நிலையில் மாணவ மாணவியர்கள் படித்துவருகின்றனர். இக்கல்வியாண்டில் இக்கல்லூரியின் வழியாக பட்டம் பெற்ற முதல் மாணவ அணியினர் (ஐ டீயவஉh) வெளிவர உள்ளனர். அவர்களுக்கு என்னுடை மனமார்ந்த வாழ்த்துகள்.
இக்கல்லூரி தொடங்கப்பெற்ற காலத்தில்; முதல்வராக முனைவர் சி.நாகேசுவரராவ் அவர்கள் பணியாற்றினார். 01.09.2014 முதல் முனைவர் மு.லதா அவர்கள் முதல்வராகப் பணியாற்றினார். இவர் பணிஉயர்வு பெற்று முதல்நிலைக் கல்லூரியான சுரண்டை காமராசர் அ;ரசு கலைக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார். இவர்களைத் தொடர்ந்து மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் வேதியியல் துறை இணைப்பேராசிரியை, மற்றும் தேர்வு நெறியாளர் ஆகிய பொறுப்புகளில் பணியாற்றிய முனைவர் தா. சரளா தேம்பாவணி ஆகிய நான் பணி உயர்வு கருதி இக்கல்லூரிக்கு முதல்வராக 17.12.2015 அன்று முதல் பணியாற்றி வருகிறேன்.

இக்கல்லூரியில் புதிதாகப் பணியில் இணைந்தவர்கள்

இக்கல்லூரியில் சென்ற கல்வியாண்டின் துவக்கத்தில் பகராண்மை அடிப்படையில் பணியாற்றிய திரு.து.சண்முகசுந்தரம், முனைவர் க.சோமசுந்தரம், முனைவர் கயி.சாத்தப்பன், முனைவர் மு.மரகதவல்லி, முனைவர் என்.பாரதி ஆகியோர் தத்தம் தாய் கல்லூரிகளுக்கு பகராண்மைப் பணி முடித்துத் திரும்பினர்.
இப்பணியிடங்களில் தமிழ்த்துறையில் முனைவர் க. சொல்லேர் உழவன் அவர்களும், ஆங்கிலத் துறையில் முனைவர் இரா. இராஜசேகரன் அவர்களும்,

திரு. ஈ. சுரேஷ் அவர்களும், கணிதத் துறையில் திரு. ர. வெங்கடேசன் அவர்களும், கணினி அறிவியல் துறையில் திரு. எம். குணசேகரன் அவர்களும் புதிதாகக் கல்லூரிக் கல்விப்பணியில் சேர்ந்தனர்.

இவர்களில் கணினி அறிவியல் துறைப் பேராசிரியர் திரு எம். குணசேகரன் அவர்கள் ஓசூர் அரசு கலை அறிவியல் கல்லூரிக்குப் பணிமாறுதல் பெற்றுச் சென்றார். அவரின் இடத்திற்கு மேற்படி கல்லூரியின் கணினி அறிவியல் துறைப் பேராசிரியர் முனைவர் து. சுந்தர் பணிமாறுதல் பெற்று இக்கல்லூரியில் பணியாற்றுகிறார். மேலும் ஊட்டி, அரசு கலைக்கல்லூரி கணிதத் துறையில் இருந்து பணிமாறுதல் பெற்று திரு க. செந்தில் அவர்கள் இக்கல்லூரியின் கணிதத் துறையில் பணியாற்றி வருகிறார்.

அலுவலகப் பிரிவில், நிலக்கோட்டை அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் அலுவலக கண்காணிப்பாளராகப் பணியாற்றிய திரு அ. பிரான்சிஸ் அவர்கள் நிதியாளராக (டீரசளயச ) பணிஉயர்வு பெற்று இங்குப் பணிபுரிந்து வருகிறார்.

கௌரவ விரிவுரையாளர்கள் என்ற நிலையில் இக்கல்வியாண்டில் எழுந்த பணியிடங்களில் தமிழ்த்துறையில் திருமதி எஸ். தொண்டியம்மாள், திருமதி க. சத்யா ஆகியோரும், வணிகவியல் துறையில் திருமதி க. மலர்விழி ரேகா, திரு. பூ முத்துராமன் ஆகியோரும் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் தவிர ஆசிரியர் தேவை கருதி பெற்றோர் ஆசிரியர் கழக நிதியின் அடிப்படையில் தமிழ்த்துறையில் திருமதி கார்த்திகாவும், ஆங்கிலத் துறையில் திரு ஐ. அமல்ராஜ் அவர்களும், கணிதத் துறையில் திரு போ. பாலசுப்பிரமணியன் அவர்களும், வணிகவியல் துறையில் திரு ஆர். ரமேஷ் அவர்களும் பணியாற்றிவருகின்றனர்.

கல்லூரிப் பேராசிரியர்களின் கல்விசார் வளர்ச்சிப் பணிகள்

இக்கல்லூரியின் கணினி அறிவியல் துறைத் தலைவராக விளங்கும் முனைவர் து. சுந்தர் அவர்கள் கணினி அறிவியல் துறையில் ஆய்வுகளை வழி நடத்தும் ஆய்வு நெறியாளர் தகுதியை அழகப்பா பல்கலைக்கழக அளவில் பெற்றுள்ளார்.

20.01.2016 அன்று அழகப்பா கல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய உயர்கல்வி கணக்கீடு (யுஜளூர்நு) குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் இக்கல்லூரியின் சார்பில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. சொல்லேருழவன் மற்றும் கணிதத்துறைக் கௌரவவிரிவுரையாளர் எஸ். சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கணிதத் துறைப் பேராசிரியர், திரு. ர. வெங்கடேசன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற ~~அனைவருக்கும் உயர்கல்வி|| என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

ஆங்கிலத்துறைப் பேராசிரியர்களான முனைவர் ரா.ராஜசேகரன் அவர்களும், பேரா ஈ. சுரேஷ் அவர்களும் ~~மக்கள் தொடர்புக்கான ஒருங்கிணைக்கப்பெற்ற ஆங்கில மொழி பாடப் பயிற்சித் திட்டம்;||(ஊடுஐடு) என்ற தலைப்பில் மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் 28.1.2016 அன்று நடைபெற்ற

பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர்.
ஆங்கிலத்துறைப் பேராசிரியர் ஈ. சுரேஷ் திருச்சி புனித வளனார் கல்லூரியில் டிசம்பர் 13 அன்று நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டார். மேலும் அவரின் ஆய்வுக் கட்டுரை சர்வதேச இதழில் வெளிவந்துள்ளது.
இக்கல்வியாண்டில் ஆங்கிலத்துறைப் பேராசிரியர்களான எஸ். சரவணன், ரா. சரவணன் ஆகியோர் தங்களின் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.
தமிழ்த்துறை இணைப்பேராசிரியரான முனைவர் மு.பழனியப்பன் கோவை நிர்மலா கல்லூரி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி ஆகியவற்றின் தமிழாய்வுத் துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித்தேர்வுகளில் புறத்தேர்வாளராகக் கலந்துகொண்டார். அவர் மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில 26.2.2016 அன்று நடைபெற்ற ~~மாமதுரை போற்றுவோம்|| என்ற யுஜிசி கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசித்தார். இவரின் மேற்பார்வையில் தமிழ்த்துறையில் பகுதிநேர அடிப்படையில் மூவர் முனைவர் பட்ட ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றனர். இவரை ஆய்வு முன்னவராகக் கொண்டு, சென்னையில் உள்ள செம்மொழத் தமிழாய்வு நிறுவனம் ~~மணிமேகலை கால சமயங்களின் முற்கால நிலையும், பிற்கால நிலையும்|| என்ற தலைப்பில் ஆய்வுத்திட்டத்தைச் செயல்படுத்த, ரூ 2,50,000 (ரூபாய் இரண்டரை லட்சம் ரூபாய்) நிதியை ஒதுக்கியுள்ளது. அதனை அவர் செயல்படுத்தி வருகிறார்.
இக்கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலராக விளங்கும் திரு. ஈ. சுரேஷ் அவர்கள் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் பயிற்சியை டிசம்பர் 16 முதல்; 22 ஆம் நாள்வரை கோயம்புத்தூரில் முடித்து வந்துள்ளார்.
இக்கல்லூரியில் ஆசிரியர் முன்னேற்றம் கருதி “வகுப்பறை மேலாண்மையும், திறன்மிகு கற்பித்தலும்|| என்ற தலைப்பில் 11.2.2016 அன்று ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பெற்றது. இதில் இப்பொருள் தொடர்பான பல்வேறு திறன்கள் எடுத்துரைக்கப்பெற்று ஆசிரியர்களின் திறன் மேம்பட வழிகாட்டப்பெற்றது.
இக்கல்லூரியின் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் ஈ. சுரேஷ் அவர்கள் சென்னை ராணிமேரிக் கல்லூரியில் நடத்தப்பட்ட மூன்று நாள்கள் ஆங்கில மொழி தொடர்பு படுத்தல் பயிற்சியில் கலந்து கொண்டார்.

மன்ற விழாக்கள்

இக்கல்லூரியில் உள்ள அனைத்துத் துறைகளின் மன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 16.02.2016 அன்று தமிழ் மன்ற விழா நடைபெற்றது. இதில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் ம. துரை அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கணித மன்றம் 26.02.2016 அன்று நடத்தப்பெற்றது. இதில் மேலூர் அரசு கலைக்கல்லூரியின் கணிதத் துறைப் பேராசிரியர் முனைவர் பாலமுருகன் கலந்து கொண்டுச் சிறப்புரையாற்றினார். 29.2.2016 அன்று ஆங்கிலத்துறை

மன்றக் கூட்டம் நடைபெற்றது. இதில் அழகப்பா பல்கலைக்கழக ஆங்கிலத் துறைப் பேராசிரியர் முனைவர் எம். நடராஜன் -கலந்து கொண்டுச் சிறப்புரையாற்றினார். கணினி அறிவியல் துறையின் மன்றக் கூட்டம் 1.3.2016 அன்று நடத்தப்பெற்றது. இதில் மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் கணினி அறிவியல் துறைப் பேராசிரியர் திருமதி ஆர், ராஜராஜேஸ்வரி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வணிகவியல் துறையின் மன்றக் கூட்டம் 8.03.2016 அன்று நடைபெற உள்ளது. இதற்கு அழகப்பா பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் மதிராசு அவர்கள் வருகை தர உள்ளார்.

உரிய முறையில் மன்ற விழாக்கள் நடத்தப்பெற்று 5.3.2016 அன்று ஆண்டுவிழா நடைபெற்றது. இவ்விழாவில் இராமநாதபுர பாராளுமன்ற உறுப்பினர் திரு அ. அன்வர்ராஜா அவர்கள் கலந்து கொண்டுப் பேருரையாற்றினார். மேலும் இவ்விழாவில் கல்லூரி வளர்ச்சிக்குழுத் தலைவர் திரு, செ. ராஜேந்திரன், திரு. கே. சி. ஆணிமுத்து, திரு, வீ. இராமகிருஷ்ணன், திரு. இரா. மதிவாணன், திரு. கே. ஆர். என் மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். மேலும் சுரண்டை, காமராசர் அரசு கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் மு.லதா அவர்கள் மகிழ்வுரை ஆற்றினார். மாணவ மாணவியர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை

இக்கல்லூரியில் 2013-2014 ஆம் ஆண்டில் 73 மாணவர்களும் 98 மாணவிகளும் ஆக மொத்தம் 171 பேர் சேர்க்கை பெற்று மூன்றாம் ஆண்டு படித்து வருகின்றனர். 2014-15ஆம் கல்வியாண்டில் 86 மாணவர்களும், 135 மாணவிகளும் ஆக மொத்தம் 221 பேர் சேர்க்கை பெற்று இரண்டாம் ஆண்டில் படித்து வருகின்றனர். 2015-16 ஆம் கல்வியாண்டில் 96 மாணவர்களும், 148 மாணவிகளும் ஆக மொத்தம் 244 பேர் சேர்க்கை பெற்று முதலாண்டில் படித்து வருகின்றனர். தற்போது கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர் எண்ணிக்கை 636 ஆகும்.

கல்வி உதவித் தொகை

தமிழக அரசின் சார்பில் கல்விஉதவித்தொகை இக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்க்கு வழங்கப்பெற்று வருகின்றது.

2015-2016 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்கள் பிரிவில் 158 பேர் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பித்துள்ளனர். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்கள் பிரிவில் 184 பேர் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பித்துள்ளனர்.

இலவச பேருந்துப் பயண அனுமதி

2015-16 ஆம் கல்வியாண்டில் 409 மாணவ மாணவியருக்கு இலவச பேருந்துப் பயண அனுமதி தமிழகஅரசால் வழங்கப்பெற்றுள்ளது.

கணினி அறிவொளித் திட்டம்

மாணவ மாணவியர்க்குக் கூடுதலாகக் கணினிப் பயிற்சி வகுப்பு நம்கல்லூரியில் நடைபெற்றுவருகின்றது. இதில் 2013-14 ஆம் கல்வியாண்டில் 148 பேரும் 2014-15ஆம் கல்வியாண்டில் 184 பேரும் 2015- 16 ஆம் க ல்வியாண்டில் 210 பேரும் சேர்ந்துப் பயன்பெற்று வருகின்றனர். இவர்களுள் 2013-14, 2014-15 ஆகிய கல்வியாண்டுகளில் இப்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான மாநில அளவிலான் தேர்வு 2. 3. 2016 அன்று நடத்தப்பெற்றது. அதன் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்பெற உள்ளன. இத்தேர்வில் வெற்றிபெற்றோருக்கு உரிய சான்றிதழ்கள் தமிழக அரசால் வழங்கப்பெற உள்ளது.

நாட்டுநலப்பணித் திட்டச் செயல்பாடுகள்

இக்கல்லூரியில் நாட்டுநலப் பணித்திட்டம், ரெட்ரிப்பன் கிளப், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், மகளிர் மேம்பாட்டுக்குழு, தற்கொலைத் தடுப்பு விழிப்புணர்வு அமைப்பு ஆகியனவும் செயல்பட்டு வருகின்றன.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் தகைசால் அப்துல் கலாம் பிறந்தநாளை ஒட்டி 15.10.2015 அன்று திருவாடானை தாலுகா தலைமை மருத்துவமனையில் மரக்கன்றுகள் நடப்பெற்றன. இதற்குக் கணிதத்துறைப் பேராசிரியர் திரு சதீஷ் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணி 3.10.2015 அன்று நடத்தப்பெற்றது. இந்நிகழ்ச்சி வட்டாட்சியர் மற்றும் தேர்தல் துறை அலுவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியைத் n;தாடர்ந்து வாக்களார் பெயர் சேர்ப்பு விழிப்புணர்வு முகாம் இக்கல்லூரியில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பெற்றது. இதன் ஒருங்கிணைப்பாளராகப் பேராசிரியர் க. இளையராஜா விளங்கினார்.

நாட்டுநலப்பணித்திட்டம், ரெட்ரிப்பன் கிளப், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இணைந்து 26.2.2016 அன்று ரத்ததான முகாம், மற்றும் இரத்தவகையறிதல் முகாம் ஆகியவற்றை நடத்தின. இராமநாதபுரம் மாவட்ட மருத்துவனை இரத்த வங்கி அலுவலர் திரு. சந்தானராஜ் அவர்கள் இந்நிகழ்விற்கு ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

மேலும் நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பில் சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா ஆகியன சிறப்புடன் கொண்டாடப்பெற்றன. இவ்விழாக்கள் கருதி வளாகத் தூய்மையும் நடைபெற்றது. மேலும் மாணவர்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் ஜனவரி 20, 21 ஆகிய தேதிகளில் பேராசிரியர், உயிரின் உயிரே ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பெற்றன.

இவ்வாண்டு நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் கிளியூர். திருவடிமதியூர் ஆகிய கிராமங்ளில் ஏழுநாள் முகாம் மார்ச் 21 முதல் மார்ச் 27 வரை நடைபெற்றது. இதில் அழகப்பா பல்கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் பேராசிரியர் சு. இராஜாராம் கலந்து கொண்டார். மேலும் கிராம

மக்களுக்கு அரசு நலப்பணிகளை விளக்கி தீயணைப்புத்துறையினர், காவல்துறையினர், வட்டாட்சியர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மேலும் இம்முகாமில் கிராம மக்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பெற்றது. இம்முகாமில் அனைத்துப் பேராசிரியர்களும் முதல்வர் அவர்களும் கலந்து கொண்டு ஊக்கமளித்தனர்.

மாணவர் வளர்ச்சிக்கான நிகழ்வுகள்

இவ்வாண்டிலும் இராமநாதபுரத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிக்கு நம் கல்லூரி மாணவ மாணவியர் அனைவரும் பேராசியர்களும் மாவட்ட ஆட்சியர் வழிகாட்டலின்படி நேரில் சென்று பார்வையிட்டும், புத்தகங்கள் வாங்கியும் பயன்பெற்றனர்.

30.07.2015 அன்று முன்னாள் குடியரசுத் தலைவர் தகைசால் அப்துல்கலாம் அவர்களின் மறைவினை ஒட்டி, திருவாடானையில் அமைதிப் பேரணி நடைபெற்றது. அதில் இக்கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சமத்துவப் பொங்கல் விழா 09.01.2016 அன்று கல்லூரியில் கொண்டாடப் பெற்றது. இதில் மாணவ மாணவியர்கள் மகிழ்வுடன் கலந்து கொண்டு துறைதோறும் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்

. 17.02.2016 அன்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் இக்கல்லூரிக்கு வருகை தந்து மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடினார். புத்தக வாசிப்பின் நன்மை பற்றியும் மனித நேயச் செயல்பாடுகள் குறித்தும் அவர் பேசிய உரை மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

18.02.2016 அன்று ஒரு நாள் யோகா பயிற்சி வகுப்பு நடத்தப்பெற்றது. கணிதத்துறை, மற்றும் தமிழ்த்துறை சார்ந்த இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்குக் கூடுதல் பாடமாக மனவளக்கலைப் பாடப்பகுதி உள்ளதால், இப்பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பெற்றது. சிவகங்கை மனவளக்கலை மன்றத்தினர் இப்பயிற்சியை அளித்தனர்.

16.2.2016 அன்று கணித்தமிழ்பேரவை இக்கல்லூரியில் துவங்கப்பெற்றது. அழகப்பா பல்கலைக்கழக ஆய்வாளர் திரு மணிகண்டன், தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். கணித்தமிழ்ப் பேரவையின் வழி காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பயிறசி வகுப்புகளில் கணினி அறிவியல் துறை ஆசிரியர்கள் திரு. இராமமூர்த்தி, திரு. நிர்மல் குமார், வணிகவியல் துறை ஆசிரியர் திரு இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்

கல்லூரி நுண்கலைமன்றம் சார்பில் போட்டிகள் நடத்தப்பெற்று அதற்குரிய பரிசுகளும் 30.3.2016 அன்று வழங்கப்பெற்றன. பரிசு பெற்றோர் விபரம் இம்மலரில் தனியாக இணைக்கப்பெற்றுள்ளது. வழங்கப்பெற உள்ளன. இந்நிகழ்வினை இக்கல்லூரியின் ஆங்கிலத் துறை ஒருங்கிணைத்தது. இக்கல்லூரியில் மூன்றுநாள்கள் விளையாட்டு போட்டிகள்

நடத்தப்பெற்று அதற்கான பரிசுகளும் 30.3.2016 அன்று வழங்கப்பெற்றன. விளையாட்டுப் டுபோட்டிகளின் ஒருங்கிணைப்பாளராக முனைவர் சொல்லேர் உழவன் செயல்பட்டுவருகிறார். பரிசு பெற்றோர் விபரமும் இம்மலரில் இணைக்கப்பெற்றுள்ளது. ஊரக விளையாட்டுப் போட்டிகளிலும் நம் மாணவர்கள் கலந்து கொண்டு குறிக்கத்தக்க பரிசுகள் பெற்றுள்ளனர்.
இக்கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் சீரோடும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பெற்று கல்லூரி வளர்ச்சிப்பணி பெருமளவில் முன்னேறிவருகிறது.
இக்கல்லூரியில் தேசிய மாணவர் படை தொடங்க ஆவன செய்யப்பெற்று வருகிறது. விரைவில் இம்மாணவர் படை அமைப்பு செயல்பட உள்ளது.
மாணவ மாணவியர் பெற்ற பரிசுகள்
திருவாடானை தொகுதி அளவில் நடைபெற்ற வாக்காளார் விழிப்புணர்வு போட்டிகளில் கலந்து கொண்டு எம் கல்லூரி மாணவர்கள் பல பரிசுகளைப் பெற்றுள்ளனர். பேச்சுப்போட்டியில் எஸ். ரம்யா, எம். ஐஸ்வர்யா, பி. அனுசுயா ஆகிய மாணவிகள் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப் பெற்றனர். கட்டுரைப்போட்டியில் கே. பௌலின் பெனிட்டா, அ.பார்த்தீபன், சங்கீதா ஆகியோர்கள் முறையே முதல் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றனர்.
இராமநாதபுர மாவட்ட அளவில் நடைபெற்ற தமிழ்வளர்ச்சித் துறை பேச்சுப்போட்டியில் இக்கல்லூரியில் கணிதத் துறையில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவன் செல்வன் எம். விஜய் மில்ட்டன் இரண்டாம் பரிசாக ரூபாய் ஏழாயிரம் வென்றது குறிக்கத்தக்கதாகும்.
இராமநாதபுர சுற்றுலாத் துறை சார்பாக நடத்தப்பெற்ற போட்டிகளில் ஆங்கிலத் துறை சார்ந்த கே. பௌலின் பெனிட்டா, ஜெயலட்சுமி ஆகிய மாணவிகள் கலந்து கொண்டு கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் முறையே இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றனர்.
அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கலைவிழாவில் கல்லூரி சார்பில் நாட்டுப்புற ஆடல் பிரிவில் கலந்து கொண்டு முதற்பரிசினை இக்கல்லூரியின் மாணவ மாணவியர்களான பாண்டிமீனாள், மதி, பிரசன்னா, வினிதா, கே. சித்ரா ஆகியோர் பெற்றமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது. மேலும் இதே கலைவிழாவில் கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசினை மகேந்திரன் என்னும் மாணவர் பெற்றார். இதுவும் பாராட்டுதற்குரியது. இதன் ஒருங்கிணைப்பாளராக கணித்துறைப் பேராசிரியர் போ. பாலசுப்பிரமணியன் அவர்கள் செயல்பட்டார்.
இவ்வாறு கல்லூரி வளர்ச்சிப்பணியில் முன்னேற உதவிவரும் கல்லூரி வளர்ச்சிக்குழுவனருக்கும், ஊராட்சி அமைப்பிற்கும், பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும் இந்நேரத்தில் மிக்க நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.